# சுவிசேஷ புத்தகங்களை இயேசுவின் ஆளுகையோடு தொடர்புபடுத்துதல்

# CONNECTING THE GOSPELS TO JESUS' REIGN

## அறிமுகம்

மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் சுவிசேஷ புத்தகங்களை முதலாவதாக பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் இவைகளை எப்படிப் பார்த்தார்களோ, அதே பார்வையோடு இவைகளை வாசிப்பது தான், இந்தப் பாடத்தின் நோக்கம். லூக்கா தனது சுவிசேஷ புத்தகத்தையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் தெயோப்பிலு என்பவருக்கு எழுதினான். லூக்காவின் புத்தகங்களையும் நமது கற்பனை சக்தியையும் பயன்படுத்தி நாமும் தெயோப்பிலுவின் பக்கத்தில் உட்கார்ந்து அவன் வாசிப்பதை வாசிக்க முடியும். இதனினும் சிறப்பாக, நான்கு சுவிசேஷ புத்தகங்களையும் ஒருங்கிணைத்து நாமே சொந்தமாக ஒரு சுவிசேஷ புத்தகத்தை தயாரிக்கவும் முடியும். கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷ புத்தகங்களிலிருந்து இந்த பாடத்தில் நாம் எதை புரிந்துகொள்ள வேண்டுமோ அது, முதல் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும் போதிக்கப்பட்டிருக்கும். கிறிஸ்தவர்களின் வேதபாடத்தை லேவிய ஆசாரியத்துவம் மற்றும் மாம்சத்திற்குரிய இஸ்ரவேலிலிருந்து, இயேசுவின் பிதாவுக்கென்று பிள்ளைகளை உருவாக்குகின்ற அவருடைய ராஜ்யம் மற்றும் அவருடைய ஆசாரியத்துவத்துக்குக் கொண்டுசெல்லக்கூடிய முக்கிய அம்சம் கொண்ட பாடமாக இது இருக்கின்றது. மனிதர்களிலிருந்து தேவன் தமக்கென்று வைத்துக்கொள்ள விரும்பும் விசேஷித்த கனியாக அவருடைய பிள்ளைகள் இருக்கிறார்கள். இதன் காரணமாக, இவ்விதமான கனியாக நாம் இருக்கும்படிக்கு நம்மை நாமே உருவாக்கிக்கொள்ளும்படியான பொறுப்பு நமக்கு இருக்கிறது. பார்க்கவும் *மத்தேயு 6:20; லூக்கா 3:9;*





*மாற்கு 4:26-29.* உண்மையில் தேவன் மனிதர்களை படைத்திருக்கின்ற விதமே அவர்கள் தங்களை அவருடைய சித்தத்திற்கு ஏற்றபடி உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் ஜீவன் மனிதகுலத்தின் ஜீவனுக்கு ஒளியாயிருக்கிறது. ஆகையால், கிறிஸ்தவர்களுக்கு அவரே புதிய உடன்படிக்கையின் ஜீவப்பிரமாணமாயிருக்கின்றார். *1 யோவான் 1:2; ரோமர் 8:29; எபிரெயர் 1:3; 8:10.* சுவிசேஷ புத்தகங்களில் எழுத்து வடிவத்தில், தேவனுடைய ராஜ்யத்தில் நமது பங்கைப்பற்றி தெரிவிக்கின்ற இயேசுவின் போதனைகளை புரிந்துகொள்ளும்படிக்கு நமது மனங்களை ஆயத்தப்படுத்த தயவுகூர்ந்து *லூக்கா 1:1-4*வரை வாசியுங்கள்.

1. முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகளைக் குறித்து சரித்திரம் எழுத அநேகம் பேர் ஏற்பட்ட படியினால்,

   அ. மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் இயேசுவை குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் தேவனுடைய குமாரனாகிய மேசியாவை அவர் அனுப்புவதைப் பற்றி லூக்கா தெரிவிக்கின்ற தேவனுடைய விவரத்தில் நிறைவேறியது. *லூக்கா 24:44.*

   ஆ. "கண்ணாரக்கண்டு வசனத்தை போதித்தவர்கள்" என்று லூக்கா குறிப்பிடுகின்ற அநேகம் பேரில் மத்தேயு, யோவான், மாற்கு என்ற மூன்று பேரும் அடங்கியிருக்கிறார்கள். இந்த நான்கு கிறிஸ்தவர்களும் எழுதியிருக்கின்ற புத்தகங்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டவையாக கிறிஸ்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. *லூக். 24:45-49.*

இ. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து யூதர்களுக்குப் பிரசங்கம் பண்ணினதை "கண்ணாரக் கண்டு வசனத்தை போதித்தவர்கள்" மூலமாக கற்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்களில் லூக்காவும் ஒருவனாக இருந்திருக்கலாம் என்பதையே "எங்களுக்கு" என்ற வார்த்தை குறிப்பிடுகிறது. *எபிரெயர் 2:2-4.*

ஈ. தேவனுடைய வலது பாரிசத்தில் தமக்குரிய இடத்திற்கு இயேசு போய் சேர்ந்த பிறகு, அவர் செய்ய இருக்கும் ஆளுகையோடு தொடர்புடைய அவருடைய போதனைகள் தெயோப்பிலுவிற்கு போதிக்கப்பட்டிருந்தன. *அப். 7:56.* ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த லூக்காவும் தெயோப்பிலுவிற்கு "உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை" அவன் அறிய வேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் எழுதினான். நான்கு சுவிசேஷ புத்தகங்களையும் படித்து கற்றுக்கொள்வதின் மூலமாக, தெயோப்பிலு தெரிந்து கொண்ட அதே காரியங்களின் நிச்சயத்தை நாமும் தெரிந்துகொள்ள முடியும்.

2. தயவு கூர்ந்து *அப்போஸ்தலர் 1:1-5* வரை வாசியுங்கள்.

அ. லூக்கா, "எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிந்த" பிறகு அவைகளை ஒழுங்காய் தனது சுவிசேஷ புத்தகத்தில் எழுதினான். அவன் எப்படி எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்து அறிந்தான் என்று சொல்லவில்லை. மற்ற சுவிசேஷ புத்தகங்களிலிருந்து அநேக விஷயங்களை சேகரித்து முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு பயன்படும்படி அவைகளை "ஒழுங்காய்" எழுதினான். அவன் எழுதிய விதம் சபையிலிருந்த புறஜாதியாருக்கு ஏற்றதாக இருந்திருக்கலாம்.





ஆ. "இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ் தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லவாற்றையுங் குறித்து," லூக்கா தனது சுவிசேஷ புத்தகத்தில் எழுதினான். *லூக்கா 24:44-49.*

3. அப்போஸ்தலர் புத்தகத்தில், அப்போஸ்தலனாகிய பவுலோடு பிரயாணம் பண்ணின ஒருவனாக லூக்கா தன்னையே அறிமுகப் படுத்திக்கொண்டான். பிரதிப் பெயர்களில் 'அவர்கள்' என்ற வார்த்தையிலிருந்து 'நாங்கள்' என்ற வார்த்தையாக மாறுவதைப் பாருங்கள். *அப்போஸ்தலர் 16:7,10,11,40;20:2,5,6.* பவுல் நியாய விசாரணையின் நிமித்தம் ரோமாபுரிக்குச் சென்ற போது, லூக்காவும் கூடச் சென்றான். *அப்போஸ்தலர் 27:1.* அப்போஸ்தலர் புத்தகத்தை பற்றி படிப்பதற்கு "இயேசு கிறிஸ்து செய்த தேவனுடைய சுவிசேஷ ஊழியம்" என்ற எனது புத்தகத்தை பாருங்கள். அது என்னுடைய இணையதளத்திலும் இருக்கின்றது. **www.kingdomofchrist.info**

நான்கு சுவிசேஷ புத்தகங்களை தொடர்புபடுத்துவதைக் குறித்த மூன்றாவது பாடமாக இது இருக்கின்றது. இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும், வாய் வழியாக அவர் செய்த போதனைகளையும் இந்த புத்தகத்தின் முந்தைய பாடங்களின் தலைப்புகளோடு தொடர்புபடுத்துவதே 12 மற்றும் 13ஆம் பாடங்களின் நோக்கமாயிருக்கிறது. அதே சமயத்தில் வேதத்தை கற்றுக்கொள்ளும் மாணவர்கள், சுவிசேஷ புத்தகங்களை பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற தேவனுடைய விவரத்தோடும், அவருடைய போதனையோடும் தொடர்புபடுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும்படியாக இவ்விரு பாடங்களும் அமைந்துள்ளன. கிறிஸ்தவர்

களுடைய வேதபாடத்திற்கு உதவிகரமாக இருக்கக்கூடிய சில முக்கியமான சிந்தனைகளையும், அவைகள் உள்ளடக்கி இருக்கின்றன. அவர்களுடைய வேதபாடத்துக்கு உதவுவது இந்தப் புத்தகத்தின் நோக்கமாக இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் இயேசுவின் போதனைகளை, பிரதான ஆசாரியராகவும், ராஜாவாகவும் அவர் செய்கின்ற ஆளுகையோடு தொடர்புபடுத்துவதற்கு உதவும்படி இப்பாடத்தில் சுவிசேஷ புத்தகங்களிலிருந்து தலைப்புகள் கொடுக்கப்பட இருக்கின்றன. இந்த ஒவ்வொரு தலைப்பும் தனக்குள் ஒரு பாடத்தை கொண்டிருக்கிறது. ஆகையினால், சுருக்கமான விமர்சனத்தை மட்டுமே நாம் பார்க்க முடியும்.

**பாடம்**

இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தேவன் மேற்கொண்ட பிரதான நடவடிக்கைகள் சுவிசேஷ புத்தகங்களில் காணப்படுகின்றன. "தேவனுடையதும் கிறிஸ்துவினுடையதுமாயிருக்கிற ராஜ்யத்துக்கென்று" தங்கள் "விசுவாசக் கதவினை" திறந்த நிலையில் வைத்துக்கொள்ள விரும்புகின்ற கிறிஸ்தவர்கள் இவைகளை புரிந்துகொள்ளவேண்டும். ஏறத்தாழ கி.பி. 30 ஆம் ஆண்டில் யூதர்களுக்கான தேவனுடைய தீர்க்கதரிசியாக இயேசு கிறிஸ்து தமது வாழ்க்கை மூலமாகவும், போதனை மூலமாகவும் வெளிப்படுத்தியவைகளை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அவருடைய வாழ்வும், போதனைகளும் புதிய உடன்படிக்கையின் பிரமாணங்களாயிருக்கின்றன. நமது ஆவிகள் வளர்ச்சி பெறக்கூடிய விதத்தில் எவ்விதமாக படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இவை விவரிக்கின்றன. நசரேயனாகிய இயேசு தேவனுடைய சித்தத்தை வாய்வழியாக யாக்கோபின் சந்ததியாருக்குத் தெரியப்படுத்தினார். அவருடைய போதனையின் சில குறிப்பிட்ட பகுதிகள் இப்புத்தகத்திலுள்ள முந்தைய பாடங்களோடு தொடர்புள்ளவையாக இருக்கின்றன. "இயேசு கிறிஸ்து தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்ட பிறகு" என்ன





நடந்ததோ, அதனோடு சில போதனைகளை மட்டுமே தொடர்புபடுத்த முடியும். *அப்போஸ்தலர் 2:33.* கால வரிசை முறைப்படியும், சரித்திரத்தின் படியும். தேவனுடைய உடன்படிக்கையோடு அநேகத் தொடர்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆதாம் தொடங்கி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் அவைகள் தொடர்புள்ளவையாக இருக்கின்றன. பூமியின் மீது அவர் வாழ்ந்த காலம் சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

மனுக்குலம் தற்போது தேவனுடைய ராஜ்யத்தில் குடியுரிமைப் பெற்றுள்ளது. அதைக் குறித்து இயேசுவின் போதனைகள் ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய சபைக்கு மாத்திரமே பொருந்தக்கூடியவைகளாக இருக்கின்றன. "அன்றியும் அவர்கள் (மாம்சத்திற்குரிய இஸ்ரவேலர்) விசுவாசத்திலே நிலைத்திருந்தால் அவர்களும் ஒட்ட வைக்கப்படுவார்கள். அவர்களை மறுபடியும் ஒட்ட வைக்கிறதற்கு தேவன் வல்லவராயிருக்கிறாரே." *ரோமர் 11:23; மத்தேயு 16:13-20* வரை உள்ள வசனங்களில் இயேசு தமது பிதாவுக்காக கட்டவிருந்த சபையை பற்றி அறிமுகப் படுத்தினார். அப்போஸ்தலனாகிய பவுல் செய்ய வேண்டியிருந்த ஊழியத்தைக் குறித்து அவனுக்கு இயேசு தெரிவித்த போது அவர் குறிப்பிட்ட இரண்டு ராஜ்யங்களையும் பற்றி புரிந்துகொள்ளாதவர்கள், சபையை கிறிஸ்துவின் ராஜ்யத்துக்கு சமமாக்கும்படி முயற்சி செய்தார்கள். *அப்போஸ்தலர் 26:18.* இதன் காரணமாகவே, இயேசுவும் பவுலும் பிரசங்கம் பண்ணின தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து அவர்கள் பிரசங்கம் பண்ணுவதில்லை, *அப்போஸ்தலர் 20:25.* சபையிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இடையில் உள்ள உறவுகளைக் குறித்து *மத்தேயு 18:15-20* வரை உள்ள வசனங்களில் இயேசு பேசுகிறார். "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால்" என்று 15ஆம் வசனத்திலும், சபையின் ஒழுங்கைக் குறித்து 17ஆம் வசனத்திலும் பேசுகிறார். ஒரு சபையை உருவாக்குவதற்கு எத்தனை பேர் தேவை என்பதை 20ஆம்

வசனத்தில் தெரிவிக்கிறார். இவைகள் யாவுமே யூதர்களுக்கு மாத்திரமல்ல, அவருடைய சீஷர்கள் 12 பேருக்கும் கூட புதிய சிந்தனைகளாகவே இருந்தன.

இயேசு தமது பிதாவுக்காகக் கட்டிக்கொண்டிருக்கின்ற சபையைப் போல பூமியின்மீது முன் எப்போதும் எந்த அமைப்பும் இருந்ததில்லை. இந்தப் பாடத்துக்குள் அடக்க முடியாத அளவிற்கு இந்தத் தலைப்பு பெரிதாக இருக்கின்றது; ஆயினும், ''வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாகிய'' ஆவிக்குரிய இஸ்ரவேலர் தான் இயேசு கிறிஸ்து தேவனுக்காக கட்டிக் கொண்டிருக்கும் சபை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். *ரோமர் 9:6-8; கலாத்தியர் 3:26-4:7; 6:16.* சாத்தானுடைய ராஜ்யத்திலிருந்து "வெளியே அழைக்கப்பட்ட" மக்களுக்குள் யூதர்களும் இருக்கிறார்கள் புறஜாதிகளும் இருக்கிறார்கள். *லூக்கா 13:28-30; எபேசியர் 3:3.* இந்த வெளியே அழைக்கப்பட்ட மக்கள் "பூமியின் மீது குறித்த காலத்தில் தேவனுடைய ஆலயத்தை உருவாக்கியிருக்கிறார்கள்." *மத்தேயு 18:20; 1 கொரிந்தியர் 3:16-17; எபேசியர் 2:19-22.* இயேசு பரிசுத்த ஆவியானவர் வழியாக "கிறிஸ்துவுக்குள்ளான" தேவனுடைய சபையைப் பற்றி புதிய ஏற்பாட்டில் சுவிசேஷ புத்தகங்களுக்குப் பின்னர் வரும் புத்தகங்களில் விளக்கியிருக்கின்றார். *1 தெச. 2:14.*

மக்கள் கூட்டத்தால் ஆன சபை கிறிஸ்துவின் சரீரத்தை உருவாக்குகின்றது. சாத்தானுடைய ராஜ்யத்தை விட்டு வெளியேறிய மனிதர்கள் தான் இதில் விசுவாசிகளாய் இருக்கின்றார்கள். இயேசுவை நமது வாழ்வின் ஒளியாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்பதையே யோவான் தெரிவித்தான். *யோவான் 1:1-13.* சபை தேவனுடைய ஆலயமாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியானவரால் தேவன் தமது ஆலயத்தில் இந்தப் பூமியின் மீது வாழுகின்றார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்





கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று இயேசு இஸ்ரவேலரிடம் சொன்னார். *லூக்கா 11:13.* தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளின் மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்வை நீக்கும்படிக்கு இயேசு கிறிஸ்து பலியாகின்ற வரைக்கும், பரிசுத்த ஆவியானவர் அவர்களோடு ஐக்கியம் கொள்ளமுடியாத நிலைமை இருந்தது.

இயேசுவுக்கும் அவருடைய பிதாவுக்கும் மகிமையைக் கொண்டு வருவதாய் இருந்த மூன்று நாட்களைக் குறித்து தம்முடைய சீஷர்களுக்கு திரும்பத்திரும்ப அவர் விளக்கி அறிவித்தார். ஆனால் அவர்கள் அதை புரிந்துகொள்ளவே இல்லை. *மத்தேயு 16:21-23.* "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்" என்று சிமியோன் மரியாளை எச்சரித்தான். *லூக்கா 2:35.* அது நடந்தது: இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாய் நின்று கொண்டிருந்தாள். *யோவான் 19:25.* "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்" என்ற இயேசுவின் கேள்விக்கு பேதுரு சரியான பதிலை அளித்த பிறகு அவருடைய மரணத்தைப் பற்றிய அறிவிப்பை லூக்கா பதிவு செய்திருக்கிறான். பார்க்கவும் *லூக்கா 9:18-22.* அதன் பிறகு இரட்சிப்பை பற்றி இயேசு தெரிவித்திருப்பதை லூக்கா பதிவு செய்திருக்கிறான். "இரட்சிப்பு" என்ற வார்த்தையை அது பயன்படுத்தப்படும் சந்தர்ப்பப் பொருளுக்கு ஏற்ப புரிந்துகொள்ள வேண்டும். கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவது என்பது ஒரு சந்தர்ப்பப் பொருள். கிறிஸ்தவனுடைய இரட்சிப்பு என்பது மற்றொரு சந்தர்ப்பப் பொருள். இரண்டுக்குமே கிருபை அவசியமானதாக இருக்கின்றது. *லூக்கா 9:22*இல் "மனுஷகுமாரன்... கொல்லப்படவும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும்'' என்று இயேசு சொன்னதை அப்போஸ்தலனாகிய பவுல் எப்படி இணைத்துப் பேசுகிறான் என்பதை தயவு கூர்ந்து கவனியுங்கள்: "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின்

சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." *ரோமர் 6:5.* இந்த சந்தர்ப்பப் பொருளில் 'இரட்சிப்பு' என்பது (குமாரனாகிய) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது என்பதைக் குறிக்கிறது. *கொலோசெயர் 1:13,14.* தங்களை தேவன் உருவாக்கினதற்கான அவருடைய நோக்கத்தின் மீது விசுவாசம் வைத்து அவருடைய புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி மனந்திரும்பி, தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதற்கு தங்களை அர்ப்பணிக்கும் போது, அவர்களை அவர் இரட்சிக்கிறார். *ரோமர் 6:1-4.*

இயேசு, கிறிஸ்தவர்களுக்குச் சொன்ன செய்திகளில், பெரும் பாலானவைகள் நாம் இரட்சிப்பில் வளர்வதை பற்றியே இருக்கின்றன. *1 பேதுரு 2:1-3.* நமது இரட்சிப்பை பற்றி வேறுபட்ட சுவிசேஷத்தை நாம் நம்ப வேண்டுமென்று சாத்தானும், அவனுடைய பிரசங்கியர்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இயேசு, *லூக்கா 9:23-27* வரை உள்ள வசனங்களில் தெரிவிக்கின்ற தவிர்க்க முடியாத காரியங்கள் கிறிஸ்தவர்களுக்கு உணர்த்துவது இதைதான்: "நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்." *ரோமர் 6:11.* மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி இஸ்ரவேலர்களுக்கு வாய் வழியாக பிரசங்கித்த பிறகு,

*"பின்பு அவர் பன்னிருவரையும் தம்மிடத்தில் அழைத்து: இதோ, எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவைகளெல்லாம் நிறைவேறும். எப்படியெனில், அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, பரியாசமும் நிந்தையும் அடைந்து, துப்பப்படுவார். அவரை வாரினால் அடித்து, கொலை செய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே*





*எழுந்திருப்பார் என்றார். இவைகளில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை; அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிருந்தது, அவர் சொன்னவைகளை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை." லூக்கா 18:31-34.*

இயேசு ஒரு தீர்க்கதரிசியாகவும் இருந்ததினால், மரிக்கும்படி அவர் எருசலேமுக்குப் போக வேண்டியிருந்தது. *லூக்கா 13:33.* பஸ்கா பண்டிகைக்கு முன்பாக அவர் போக விரும்பினார். 12 பேரோடு பஸ்கா உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, "அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்." *லூக்கா 22:19,20.* வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்தவர்கள் கூடிவருவதற்கு இதுதான் முக்கியக் காரணம். *அப்போஸ்தலர் 20:7.* தேவனுடைய மக்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் ஒரு காலம் வருமென்று இயேசு சமாரிய ஸ்திரீயிடம் சொன்னார். *யோவான் 4:21-24.* "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்" என்றும் இயேசு சொன்னார். *யோவான் 6:54.* கர்த்தருடைய பந்திக்கும், மேலான ஒரு காரியத்தை மனதில் கொண்டு இயேசு இந்த வாக்கியத்தை உரைத்திருக்கிறார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி விளங்குகிறது; எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்கள் தேவனையும், இயேசுவையும் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வதற்கான ஒரு வழியாகவும் இது இருக்கின்றது. கர்த்தருடைய போஜனபந்தியில் பங்குகொள்வது தொழுகையாக இருக்கின்றது. இது

ஐக்கியத்தை அடையாளப்படுத்தும் உறவாக இருக்கின்றது. *1 கொரி. 10:14-17; 11:17-34.* “கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்கள்” என்ற எனது புத்தகத்தின் நான்காம் பாகத்தில், “கர்த்தருடைய போஜன பந்தி” என்ற ஐந்தாம் பாடத்தைப் பாருங்கள். ஐக்கியமாயிருத்தல் என்பது *லூக்கா 18:31-34* வரை உள்ள வசனங்களில் இயேசு விவரித்த காட்சியில் நாம் சம்பந்தப்பட்டிருக்கிறோம் என்பதை அர்த்தப்படுத்துகிறது. பார்க்கவும் *மத்தேயு 27:27-31.* சில சமயங்களில் இதை ஒரு ஞாயிற்றுக்கிழமை சட்டமாகவும் / சம்பிரதாயமாகவும் எண்ணி, இதை வழக்கமாக செய்து வருகிறவர்கள் நம்மில் யாரெல்லாம் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாரும் இந்த சத்தியத்தை புரிந்துகொள்வதற்கு தேவன் உதவி செய்வாராக.

இயேசு கிறிஸ்து “ஆதாமுக்குள்” மரணமடைந்தார். அவர் துன்பப்பட்டார்; பானம்பண்ணும்படி அவருக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரமாக இது இருந்தது. “என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.” *மத்தேயு 26:42.* அவர் மிகவும் வேதனைப்பட்டு கடைசியாகக் கதறிச் சொன்னது இது: “என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்.” *மத்தேயு 27:46.* “அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.” *மத்தேயு 27:51.* இது கிறிஸ்தவர்களுக்கே உரிய மற்றொரு உபதேசத்தை அறிமுகப்படுத்தியது. இது மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் ஆகும். புதிய ஏற்பாட்டில் உள்ள “எபிரெயர்” புத்தகத்தை குறித்து சாத்தியமான புரிந்துகொள்ளுதல் நமக்கிராவிட்டால், பிரதான ஆசாரியராக நமக்காக செயல்படுகின்ற இயேசு கிறிஸ்துவை மெச்சிக்கொள்ளவோ, அவர் மீது விசுவாசம் கொள்ளவோ நம்மால் முடியாது. “எபிரெயர்” என்ற





தலைப்பிலுள்ள எனது புத்தகத்தைப் பாருங்கள். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிருபத்தை எப்படி வாசிப்பது என்று சொல்லிக் கொடுப்பதற்காகவே இந்தப் புத்தகம் எழுதப்பட்டது.

சிலுவை மீது இயேசு தமது ஜீவனை பலியாக தந்த செயல், விசுவாசத்தினால் நீதிமானாக்கும் உபதேசத்தில் கிறிஸ்தவர்களுடைய கிருபாசனமாக மாறியது. “கிருபாசனம்” என்று *எபிரெயர் 9:5*ஆம் வசனத்தில் காணப்படுகிற வார்த்தை எந்த கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதோ, அதே வார்த்தையிலிருந்து “கிருபாதாரபலி” என்ற வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. *ரோமர் 3:26.* மறுபடியும் பிறந்திருக்கின்ற பாவிகள், “கிறிஸ்துவுக்குள்” என்ற புதிய ராஜ்யத்தில் வாழ்கின்றார்கள். “என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல” என்று இயேசு பிலாத்துவிடம் சொன்னார். *யோவான் 18:36.* இயேசுவின் ராஜ்யம் மற்றொரு இடத்திற்கு உரியதாய் இருக்கின்றது. அந்த மற்றொரு இடத்தை பேதுருவும், பவுலும் “கிறிஸ்துவுக்குள்” என்று அடையாளப்படுத்துகிறார்கள். கிறிஸ்தவர் களுடைய மனச்சாட்சிகளை சுத்திகரிக்கும் அளவிற்கு பாவங்களுக்கான ஒரு பலியாக இயேசுகிறிஸ்து தம்மையே ஒப்புக்கொடுக்கும் வரையிலும், இந்த அதிகார எல்லை ஒரு போதும் இருந்ததே இல்லை. *எபி. 9:8-14.* “கிறிஸ்துவுக்குள்ளான” ஆளுகையானது இந்த உலகத்தில் இருக்கிறது, ஆனால் இது இந்த உலகத்திற்குரியதல்ல. *2 கொரிந்தியர் 10:3-6.* தேவனுடைய புதிய உடன்படிக்கையானது இந்தப் புதிய ஆளுகை உருவாவதற்கு ஒரு காரணமாய் இருக்கின்றது. இந்தப் புதிய உடன்படிக்கையை தான் அவர் நம்மோடே ஏற்படுத்தியிருக்கின்றார். *எபிரெயர் 10:8-12.*

புதிய உடன்படிக்கையின் பலனாக கிறிஸ்தவர்களுக்கு ஒரு புதிய ராஜ்யம் கிடைத்திருக்கிறது. நம் வாழ்வில் சரி செய்யப்படவேண்டிய காரியங்கள் சரி செய்யப்பட்டு இருப்பதால், இதில் நாம் சுத்தமனச்சாட்சி யோடு வாழ முடியும். வயதில் பெரியவர்களாக உலக ராஜ்யத்தில் வாழ்பவர்கள், "நன்மை தீமை அறியும் அறிவை" பெற்றுக் கொண்டதன் விளைவாக அவர்களுக்குக் குற்ற உணர்ச்சி உண்டாகிறது; அது அவர்களை அழிக்கவும் செய்கிறது. அவர்களுடைய இயல்பான தேவையாக இருக்கின்ற மகிமையை இது கொள்ளையடித்துவிடுகிறது. கிறிஸ்தவர்கள் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட்டு இருப்பதால், பரிசுத்த ஆவியானவர் அவர்களுடன் ஐக்கியங்கொள்ள முடியும். *ரோமர் 8:1-2.* தேவனுடைய மக்களுடைய மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்ச்சியை நீக்குவது என்பது புதிய காரியமாக இருந்தது. புதிய உடன்படிக்கையில் மாத்திரமே இந்தக் கிருபை அருளப்பட்டது. இயேசு கிறிஸ்து தம்மை பலியிட்ட போது சிந்தப்பட்ட அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கிருபை உண்டானது. கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரால் தேவனோடு ஐக்கியங் கொள்வதற்கு இந்தக் கிருபை அவசியமாகின்றது. *எபிரெயர் 10:1-3.* நமது மனச்சாட்சிகளிலிருந்து பாவங்களைக் குறித்த குற்ற உணர்ச்சி நீக்கப்படுகின்ற வரையிலும், பரிசுத்த ஆவியானவர் நம்முடன் ஐக்கியம் கொண்டதில்லை. *அப்போ. 2:38.* புதிய உடன்படிக்கையின்படி மனந்திரும்புகின்ற பாவிகளின் மனச்சாட்சிகளிலிருந்து குற்ற உணர்ச்சியை இயேசுவின் இரத்தம் இன்றும் சுத்திகரித்துக்கொண்டு இருக்கிறது. *ரோமர் 5:1; எபிரெயர் 8:12; 1 யோவான் 1:7.* ஆயினும், இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் எருசலேமில் இல்லை – அது பரலாகத்தில் இருக்கிறது. *எபிரெயர் 8:1.*

போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான். உடனே இரத்தமும், தண்ணீரும் புறப்பட்டது என்பதை





அப்போஸ்தலனாகிய யோவான் மிக ஜாக்கிரதையாக குறிப்பிடுகிறான். *யோவான் 19:34.* தன்னுடைய நற்சாட்சியை தன்னுடைய முதல் நிருபத்தில் பயன்படுத்தினான். இந்த நற்சாட்சி அந்திக்கிறிஸ்துவுக்கு எதிராக செயல்படுவதற்கு சபையை தைரியப்படுத்தியது. *1 யோவான் 4:2,3.* பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மக்களோடு ஐக்கியம் கொள்வதற்கு முன்னதாக இயேசு கிறிஸ்துவானவர் பிதாவினால் மகிமைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாயிருந்தது. *யோ. 7:37-39. எபிரெயர் 9:8-14.* அன்றைக்கு இயேசுவுடைய வார்த்தையை கேட்டுக்கொண்டிருந்தவர்கள் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருந்தால், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற அர்த்தத்தில் அவர் இப்படிச் சொல்லவில்லை. பிற்காலத்தில் அவர் மீது விசுவாசம் வைத்து ஞானஸ்நானத்தின் மூலம் மறுபடியும் பிறக்கப்போகிறவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்ற அர்த்தத்தில் தான் இப்படிச் சொன்னார். இயேசு கிறிஸ்து பரமேறிச் சென்ற பின்பு, ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி முழுமையாக புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக, பரிசுத்த ஆவியின் வரத்தை பெந்தெகொஸ்தே நாளன்று ஞானஸ்நானம் பண்ணப்பட்ட மூவாயிரம் பேரும் பெற்றுக்கொண்டபோது இது நிறைவேறியது. *யோவான் 3:5-8; அப்போஸ்தலர் 1:4-11;2:36-41.*

பரிசுத்த ஆவியானவரால் அனுதினமும் வழிநடத்தப்படுகின்ற கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் மோசேயின் நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கின்ற காரியங்கள் நிறைவேறுகின்றன. *ரோமர் 8:1-4.* நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்காக இயேசு கிறிஸ்து வரவில்லை; ஏனெனில் அவரும், மனந்திரும்பி பரலோக ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளுகிற நாமும்

அவைகளை நிறைவேற்றுகின்றோம். *மத்தேயு 5:17-20.* மத்தேயு தனது புத்தகத்தில் 5 முதல் 7 வரை உள்ள அதிகாரங்களில் தொகுத்திருக்கின்ற இயேசுவின் பிரசங்கங்கள் மோசேயின் நியாயப்பிரமாணம் நிறைவேறுகின்ற வழியை காண்பிக்கின்றன; அப்படியிருப்பினும், இயேசு கிறிஸ்து ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் ஆன பிறகு இது நடக்க வேண்டியதாய் இருந்தது. *ரோமர் 8:3,4.* தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு தேவனுடைய பிள்ளைகளுக்குரிய வாழ்க்கையை வாழ்பவர்களிடத்தில் லேவிய ஆசாரியத்துவத்தைச் சேர்ந்த பிரமாணங்கள் எப்படி நிறைவேறும் என்பதை அவருடைய பிரசங்கம் விளக்குகின்றது. பார்க்கவும் *மத்தேயு 5:21-48.* ஓய்வு நாள் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்துக்குத் தகுந்தபடி எப்படி வாழவேண்டுமென்று இயேசு மக்களுக்கு போதித்தார். பரிசேயர்களுடைய சட்டப்பூர்வ அணுகுமுறையை அவர் பாராட்டவில்லை. "அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாட்களில் நன்மை செய்வதோ, தீமை செய்வதோ, ஜீவனைக் காப்பதோ, அழிப்பதோ, எது நியாயம்" என்று கேட்டார். *லூக்கா 6:9.* "நன்மையையும், தீமையையும் அறிந்து கொள்ளும்" சக்தி இன்றைக்கும் கிறிஸ்தவர்களுக்கு இருக்கின்றது. கிறிஸ்தவர்கள் குமாரனுடைய ராஜ்யத்துக்குள் இருக்கின்றார்கள். கிறிஸ்தவர்களை சுத்திகரிக்கும்படி பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்த ஆவியானவரும் உற்சாகமாக சேர்ந்து செயல்படுகின்றார். *2 கொரிந்தியர் 13:14; எபேசியர் 1:3-14; 1 பேதுரு 1:1,2.*

இயேசு ராஜாவாகி ஆளுகை செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பு சுவிசேஷ புத்தகங்களில் அவர் போதித்த சில தெய்வீகக் கோட்பாடுகள் தேவனுடைய மக்களுக்குப் பொருந்துபவையாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சிருஷ்டிப்பைப் பற்றிய நோக்கமும், எப்போதும் மாறாததாக இருக்கின்றது. இயற்கை நியதியும், ஜீவப் பிரமாணமும் மாற்றம் அடையவில்லை. கிறிஸ்தவர்கள் இந்த மாம்சத்திற்குரிய ராஜ்யத்தில்,





இயற்கை நியதியின்படி தானியம் எப்படி வளர்கிறது என்பதை புரிந்துகொள்வதால், தேவனுடைய ராஜ்யம் நம்மில் எப்படி இருக்கவேண்டும் என்பதையும் புரிந்துகொள்ள முடியும். நமது ஆவிகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஜீவப்பிரமாணத்தின்படி தேவனுடைய ராஜ்யத்துக் கேற்ற "வாழ்க்கை முறை" நமக்குள் உருவாகின்றது. *ரோமர் 8:1,2.* நிலம் கிறிஸ்தவர்களுடைய "உள்ளான மனிதனை" குறிக்கிறது. நமது உள்ளான மனிதன் மூலமாக தான் நாம் கற்றுக்கொள்கிறோம், நம்புகிறோம், தேவனுடைய வார்த்தையின் மீது விசுவாசமும் வைக்கின்றோம். இதன் பலனாக நித்திய ஜீவன் என்ற விதை நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் விதைக்கப்படுகின்றது. இந்த "அழிவில்லாத விதை"யைப் பற்றி கற்றுக்கொண்டு, நம்பி, விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளுகிற போது, நமது புதிய பிறப்புக்கு ஏற்ற செயல்கள் ஆரம்பமாகின்றன. *1 பேதுரு 1:22-25.* தயவு கூர்ந்து 12 ஆம் பாடத்தை திரும்பவும் பாருங்கள்.

கிறிஸ்தவர்களுக்கு புதிய பிறப்பை உண்டாக்கிய அதே தேவனுடைய வசனத்தின் மீது அவர்களுக்கு இருக்கின்ற விசுவாசம், அவர்கள் இயேசு கிறிஸ்துவை போல் சிந்தித்து, அவரைப் போல் உணர ஆரம்பிக்கின்ற வரைக்கும் தொடர்ந்து அவர்களுக்குள் வளர்ச்சியடைகின்றது. *மத்தேயு 5:3-10.* நாம் இயேசுவைப் போல் செயல்படவும் தொடங்குகின்றோம். நாம் நீதியை செய்கின்றவர்களாய் இருக்கின்றோம். *மத்தேயு 5:20.* நமது நீதியான செயல் பரிசுத்தத்தை அடையும்படி நம்மை வழிநடத்துகின்றது. *ரோமர் 6:19; 1 பேதுரு 1:16.* மகிழ்ச்சியாக இருப்பதைப் பற்றிய இயேசுவின் போதனைகளை தேவனுடைய பிள்ளைகள் செயல்படுத்துவதன் மூலம் தேவனுடைய வசனம் அவர்களுக்குள் விதைக்கப்படுகின்றது. *கலா. 4:19; யாக். 1:21-25.* நாம் தேவனுடைய சித்தத்தை செய்கிறவர்களாயிருப்பதால், நாம் செய்வது நீதியுள்ளதாக இருக்கும். அவருடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக நமது

நீதியுள்ள வாழ்க்கை முறை அமைந்துள்ளது. *ரோமர் 12:2.* தேவனுடைய ராஜ்யத்துக்கு உகந்த வாழ்க்கை வாழ்வது அவருடைய சித்தத்தை செயல்படுத்துவதாய் இருக்கின்றது. இவ்விதமான வாழ்க்கை முறை முன்னால் இடம் பெற்றால் தான், பின்னால் நமது மனங்கள் புதிதாகின்ற போது நாம் மறுரூபமாக முடியும். இயேசு தமது போதனைகள் எல்லாவற்றையும் பற்றி *மத்தேயு 7:24* ஆம் வசனத்தில் விளக்கியது இதுதான். *மத். 5:3-7:27.*

மகிழ்ச்சியாக உள்ள ஒரு தேவ பிள்ளைக்கு உரிய குணங்களும் செயல்களும் கிறிஸ்தவர்களுக்குள் அதிகரிப்பது தான் அவர்களுக்கு கிடைக்கும் பலன். வாழ்வின் உண்மை நிலையைக் குறித்தும், நம்மோடு உறவாடுகின்ற மற்றவர்களைக் குறித்தும் நாம் உணர்ச்சி வசப்படுகின்ற போது, நம்முடைய மனநிலையை ஒழுங்காக வைத்துக்கொள்வது எப்படியென்று இயேசு போதித்தார். இயேசு தெரிவித்த எட்டு உணர்ச்சிகளும் உள்ளவர்களாய் விசுவாசம் நிறைந்த இருதயத்துடன் வாழ்பவர்கள், தங்களுக்குள் தேவன் வைத்திருக்கின்ற தேவைகளுக்கு திருப்தியை அனுபவிக்க முடியும். *மத்தேயு 6:33,34.* தங்களுக்குள் இருக்கும் இயல்பான தேவைகளை திருப்திப்படுத்திக்கொண்டவர்கள் அல்லது திருப்திப்படுத்திக்கொள்வதற்கு போதுமான நம்பிக்கை உள்ளவர்கள் தான் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். கிறிஸ்தவர்களுக்கு தற்காலத்திலுள்ள சில தேவைகளை திருப்திப்படுத்துவதாக தேவன் உறுதியளிக்கின்றார். மற்றவர்களை இயேசு கிறிஸ்து திரும்ப வரும்போது திருப்திப்படுத்துவதாக நம்பிக்கை அளிக்கின்றார். *ரோமர் 8:22-25; 1 பேதுரு 1:7.* நமது வாழ்வின் சவால்களை எதிர்த்து நிற்க தேவையான உறுதியான குணாதிசயத்தை நாம் வளர்த்துக்கொள்கின்றோம். *மத்தேயு 7:25-27.* கிறிஸ்தவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள், தேவன் தமக்கென்று நித்திய பிள்ளைகளை உருவாக்குவதற்காக அவர் ஏற்படுத்தி வைத்துள்ள அவருடைய பள்ளிக் கூடமாகும். *எபிரெயர் 12:4-14.* நாம் மற்றவர்களுக்கு





பயன்பட வேண்டிய விளக்காகவும், உப்பாகவும் இருக்கின்றோம். *மத்தேயு 5:13-15; 9:37,38.*

தேவனுடைய ராஜ்யம் “மக்களுக்கு அருகில் வருகிறது” எப்படி என்பதை விளக்கிச் சொல்வதற்காக இயேசு அடிக்கடி மரத்தையே பயன்படுத்தினார். “மறுபடியும் பிறந்த” மக்களுடைய குணங்களிலும், செயல்களிலும் தேவனுடைய ராஜ்யத்துக்கு ஏற்ற வாழ்க்கை முறை ஊடுருவி இருப்பதை நாம் பார்க்க முடியும். ராஜ்யத்துக்குரிய கலாச்சாரமானது கிறிஸ்தவர்களை ஒளியின் பிள்ளைகளாக அடையாளம் காட்டுகிறது. *மத். 4:17; 7:18-20; 12:33-37; 13:31-33; யோ. 12:36.* நாம் இயேசுவின் ராஜ்யமாகிய ஜீவ மார்க்கத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறோம்; ராஜ்யத்துக்குரிய கலாச்சாரம் இதில்தான் காணப்படுகிறது. நாம் இந்தப் பூமியில் இருக்கும் போதே இது நம்முடைய வாழ்க்கையாகின்றது. காலம் காலமாக மனுஷர்கள் தாங்கள் பிறந்திருக்கின்ற கலாச்சாரத்திற்கு ஏற்ப தங்களை அடையாளப்படுத்திக்கொள்வது வழக்கமாக இருக்கின்றது. தீங்கு செய்பவர்கள் யாருமே இல்லாத தேவனுடைய ராஜ்யத்தின் கலாச்சாரத்துக்கு ஏற்ப நம்மை அடையாளப்படுத்திக்கொள்வது நமது வழக்கமாக இருக்கவேண்டும். *1 கொரி. 6:9,10; கலா. 5:19-23; வெளி. 21:8.*

தேவனுடைய ராஜ்யம் ஆவிக்குரிய வகையில் மக்களுக்குள் இருக்கிறதென்பதை அவர்களுக்குப் புரியவைப்பதற்காக அவர்கள் நன்கறிந்திருந்த இயற்கையான காரியங்களை இயேசு பயன்படுத்தினார். பரலோக ராஜ்யத்தில் இருக்கும் தேவனுடைய பிள்ளைகளாக மக்கள் தங்களை பார்ப்பதற்கும், அதற்கேற்ற தரமான வாழ்க்கையை வாழ்வதற்கும் அவர்களுக்கு உதவி செய்வதே அவருடைய குறிக்கோளாய் இருந்தது. அவர் தமது மூலமாக தேவனை இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தினார். அவர் ராஜ்யத்தைக் குறித்து போதித்து அதற்கேற்ற

தரமான வாழ்க்கையை வெளிப்படுத்தினார். இதுவே பரலோக ராஜ்யத்திற்குரிய கலாச்சாரமாய் இருக்கிறது. ராஜ்யத்தைக் குறித்து அவர் செய்த போதனை, இஸ்ரவேலில் பெரும்பாலானவர்களுக்கு புதியதாய் இருந்தது. லேவிய ஆசாரியத்துவ முறையை மீட்டமைப்பதோ அல்லது அதற்கேற்ற விஷயங்களை "கூடுதலாக" தெரிவிப்பதோ இயேசு செய்த போதனையின் நோக்கமல்ல, மேசியாவாகிய அவர் வந்து விட்டார் என்பதை மக்களுக்குப் புரியவைப்பதற்காக புது திராட்சரத்தைப் பழந்துருத்திகளில் வார்த்து வைக்கிறது இல்லை என்ற உதாரணத்தை அவர் பயன்படுத்தினார். பழைய மாம்சத்துக்குரிய ஆட்சியை பழுது பார்ப்பதற்காக அவர் வரவில்லை; ஆனால் ஆவிக்குரிய புதிய சிந்தனையோடு தேவனுக்கேற்ற வாழ்க்கையை பற்றி சிந்திக்க வைப்பதற்கே அவர் வந்தார். பார்க்கவும் *மத்தேயு 9:14-17; 10:32-39.* ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்கும்படி மேசியா வந்திருந்ததால், பரலோக ராஜ்யம் சமீபித்திருந்தது.

இயேசு சொன்ன உவமைகளையும், அவருடைய மற்ற போதனைகளையும், எவர்களால் புரிந்துகொள்ள முடிந்ததோ அவர்களுக்கு ராஜ்யம் சமீபித்திருந்தது. "இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்." *மத்தேயு 13:52.* "மாம்சத்துக்குரிய ஒரு ராஜ்யத்தின் வாழ்க்கை பெட்டிக்குள்" அடைபட்டிருந்தவர்கள், பரலோக ராஜ்யத்தைக் குறித்து அவர் போதித்தவைகளை புரிந்துகொள்ளவில்லை. ராஜ்யத்தைக் குறித்து அவர் சொன்ன அறிவுரைகளை கேட்டிருந்தவர்கள் எந்த உவமைகளை கேள்விப்பட்டார்களோ, அதே உவமைகளைத் தான் இவர்களும் கேள்விப்பட்டார்கள், ஆனாலும் இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. *மத்தேயு 13:10-17.*





பின்வரும் வசனங்கள் நிறைவேறுகின்ற போது அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கக்கூடிய அவருடைய ஊழியம் நிறைவடையும். தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்த அவருடைய பிள்ளைகள் "கிறிஸ்துவுக்குள்" உருவாகிக்கொண்டு இருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யத்துக்கென்று அவருடைய கனியை கொண்டு செல்லும்படியாக இயேசு திரும்ப வருவார். "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்." *மத்தேயு 24:44.*

*அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத் தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலு மிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள். மத்தேயு 24:30,31.*

*இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார். லூக்கா 21:28.*

*ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள். பார்க்கவும் ஆதி. 6:7;7:21.*

*அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும். அப்பொழுது, இரண்டு பேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக்கொண்டிருப்பார்கள்; ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள்; ஒருத்தி கைவிடப்படுவாள். மத்தேயு 24:39-41.*

*ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக் கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார். லூக்கா 21:36.*

நியாயத்தீர்ப்பு நாளையும், பரலோகத்தையும் நரகத்தையும் குறித்த இந்த விளக்கங்கள் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவில்லை. சிறுவர்களுக்கு இடறல் உண்டாக்குகின்ற மக்களைக் குறித்த தமது பிரசங்கத்தை இயேசு முடித்தபோது, ஏசாயா சொன்னதை அவர் மேற்கோள் காட்டினார். *ஏசாயா 66:24; மாற்கு 9:42-50.* எல்லா மக்களுடைய ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகள், அவைகள் நியாயத்தீர்ப்பு நாளுக்கென்று அவரிடம் திரும்ப போய்ச் சேரும். மனுக்குலத்தின் ஆவி ஒருபோதும் மரிப்பதே இல்லை. நியாயத்தீர்ப்புக்குப் பிறகு தேவனைவிட்டு புறம்பே தள்ளப்படும் மனிதர்களைக் குறித்து ஏசாயா பேசினான். அவன் சொன்னதும் இயேசு மேற்கோள் காட்டினதும் இதுதான்: “அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்,” இவைகள் மிகுந்த விளக்கமாக நாம் படித்துப் புரிந்துகொள்ளவேண்டிய தலைப்புகளாக இருக்கின்றன.

தேவனுடைய பிள்ளைகள் செய்கின்ற நற்கிரியைகளே அவர் தம்முடைய பிள்ளைகளிடமிருந்து எதிர்பார்க்கிற கனியாக இருக்கிறது; இருப்பினும், நாம் செய்கின்ற நற்கிரியைகள் நம்முடைய இருதயங்களிலும், மனங்களிலும் எழுதப்பட்டுள்ள ஜீவப்பிரமாணங்களுக்கு ஏற்றவைகளாக இருக்க வேண்டும். *மத்தேயு 7:17-20; 12:33-37; 1 கொரி. 13:3.* நாம் செய்யும் நற்கிரியைகளை எந்த நோக்கத்தோடு செய்கிறோம் என்பதைக் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே விவாதிக்கப்படும். *யோவான் 5:28-30.* இயேசு நியாயத்தீர்ப்பு நாளைப் பற்றி வாய்வழியாக யூதர்களுக்கும், எழுத்து வடிவில் சுவிசேஷ புத்தகங்கள் வழியாக சபைக்கும் போதித்திருந்தாலும், இந்த போதனைகள் எல்லா மக்களுக்கும் உரியவைகளாகவே





இருக்கின்றன. நமது ஆவிகள் (உள்ளான மனிதர்கள்) நமது சரீரங்களை விட்டு வெளியேறுகின்ற காலத்துக்கு அப்பாற்பட்டவைகளாக இந்தப் போதனைகள் இருக்கின்றன. பார்க்கவும் *மத்தேயு 25:14-46; லூக்கா 19:11-27; வெளி. 20:11-15.* பரலோகத்தில் இருப்பவர்களோ, நரகத்தில் இருப்பவர்களோ யாராயிருந்தாலும் எல்லாருக்கும் உரிய வகையில் நியாயத்தீர்ப்பு பற்றியும், அதன் பிறகு உள்ள வாழ்க்கையை பற்றியும் தெளிவான தகவலை இயேசு வெளிப்படுத்தினார். பார்க்கவும் *லூக்கா 6:35;9:23-27,62;10:18-20;12:4-10,13-21.* இந்த வசனங்களோடு கூட இயேசு செய்த இன்னும் பல போதனைகளும் கடைசி நியாயத்தீர்ப்புக்கு நம் கவனத்தைக் கொண்டு செல்கின்றன. மரணத்துக்குப் பிறகு உள்ள வாழ்க்கையைப் பற்றி சில விசேஷத்த காரியங்களையும் அவர் விளக்கினார். பார்க்கவும் *லூக்கா 16:19-31;18:18-30;20:34-38.*

சுவிசேஷ புத்தகங்களை வாசிக்கும் உரிமை பெற்ற தெயோப்பிலு போன்ற மனிதர்களும் மற்ற கிறிஸ்தவர்களும் மேலே சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களை ஏற்கனவே அனுபவித்து மகிழ்ந்துகொண்டு இருந்தார்கள். கிறிஸ்தவ மத சாஸ்திரங்களும், தெய்வபக்தியுள்ள தர்ம சாஸ்திரங்களும், கிறிஸ்தவ செயல் முறைகளும் இந்த ஆசீர்வாதங்களில் அடங்கியுள்ளன. தேவன் தெரிவிக்கின்ற வரலாற்றை நம்முடைய காலத்தில் பார்க்க முடியாது. ஆனால் இந்த மூன்று காரியங்களையும் “கிறிஸ்துவுக்குள்ளான” நமது வாழ்வில் பொருத்திக்கொள்ள முடியும். “தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு,” தம்மை பின்பற்ற போதுமான அளவுக்கு விசுவாசமுள்ள மக்களுடைய வாழ்வின் எல்லா அம்சங்களையும் பற்றி இயேசு பேசினார். *லூக்கா 9:23.* கிறிஸ்தவர்கள் சுவிசேஷ புத்தகங்களில் விசேஷமாய் கவனிக்க வேண்டிய இன்னும் சில போதனைகளை பின்வருமாறு காணலாம். இவைகளை விரிவாக பார்ப்பதற்கு இந்தப் பாடத்தில் போதுமான இடம் இல்லை.

**ஒற்றுமை :** "அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். *யோவான் 17:21.*

**வெளிப்படுத்தல் :** "பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான் களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்." *மத்தேயு 11:25.*

**அன்பு :** "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்." *யோவான் 14:23. பார்க்கவும் 1 யோவான் 4:13-21.*

**ஏழைகள் :** "நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானா யிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார் கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்." *லூக்கா 14:13,14.*

**பொருளாசை :** "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையா யிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்." *லூக்கா 12:15.*





**உக்கிராண ஊழியம் :** "கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிரா விட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?" *லூக்கா 16:10-12.*

**தூஷணம் :** "பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை." *லூக்கா 12:10.*

**திருமணம் :** "ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்." *மத்தேயு 19:6.*

**புறஜாதிகள் :** "புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்." *லூக்கா 2:30,31,32.*

**தலைமைப் பண்பு :** "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத் திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; போஜனத்தை

*விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்." யோவான் 13:3-5.*

**சுவிசேஷம் அறிவித்தல் :** *"பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.'' மத்தேயு 4:23.* அவருடைய ஊழியத்தை பற்றிய வாக்கியத்தை தயவுகூர்ந்து *லூக்கா 4:18,19* வசனங்களில் பாருங்கள். "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன் என்றார்." *லூக்கா 5:31,32.* மனுஷரைப் "பிடிக்கிறவர்களாக" பயிற்சி கொடுக்கும்படி இயேசு 12 பேரை தெரிந்துகொண்டார். *லூக்கா 5:10; 6:12-16.* "தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார்." *லூக்கா 9:2.* "இவைகளுக்குப் பின்பு கர்த்தர் வேறே எழுபதுபேரை நியமித்து, தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார்." *லூக்கா 10:1.* செய்கையின் மூலம் வழிநடத்தும் ஒரு முறையிலேயே இயேசு சுவிசேஷ ஊழியத்தை செய்தார். அவர் மூலம் சுவிசேஷத்தை கேட்டிருந்த மக்களுக்குள் இருந்து தம்மோடு ஊழியத்தில் சேர்ந்து கொள்ளும்படி தேவையானவர்களை பிற்பாடு தேர்ந்தெடுத்தார். இயேசு பிரசங்கித்த அதே ராஜ்யத்தின் செய்தியை அவர்களும்





பிரசங்கிக்கும்படி தமது போதனையின் மூலமாக அவர் அவர்களுக்கு ஊழியம் செய்து, அவர்களை வெளியே அனுப்பினார். "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்." *லூக்கா 19:10.*

இயேசு தமது வாழ்க்கை முழுவதிலும், சிலுவையில் அறையப்பட்ட சூழ்நிலையிலும் கூட மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதை தொடர்ந்தார். *லூக்கா 22:28-31,42,43.* தேவன் அவருடைய மாம்சத்திற்குரிய ஜீவனை மீட்டுக் கொடுத்த அதே நாளிலேயே எம்மாவு என்னும் கிராமத்துக்குப் போய்க்கொண்டிருந்த இரண்டு மனுஷர்களோடு சேர்ந்துகொண்டு தமது சுவிசேஷ ஊழியத்தை தொடர்ந்தார். "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரிய வைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக் கிறவராகக் காண்பித்தார்." *அப்போஸ்தலர் 1:3.*

இயேசுவை நேசிக்கின்ற கிறிஸ்தவர்கள், அவருடைய போதனைகளுக்குக் கீழ்ப்படிவார்கள். அப்போஸ்தலர்களும், அப்போஸ்தலர் போதித்தவைகளை கேட்டவர்களும் பின்வரும் கட்டளையை இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள்:

*...வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். மத்தேயு 28:18-20.*